

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு தீர்மானயேற்பு பொதுக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். உடன் கழக கொள்கைப் பரப்பு செயலாளர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி மற்றும் கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.




திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஆம்பூரில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழக செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் ஜெ.கான் ஸ்ன்டைன் ரவீந்திரன் சிறப்புரை ஆற்றினார். அருகில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், எம்.எல்.ஏக்கள் ஏ.நல்லதம்பி, அசெ.வில்வ நாதன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன்,ஆ.சம்பத்குமார்,நகர செயலாளர்கள் எஸ்.ராஜேந்திரன், எம்.ஆர்.ஆறுமுகம், தொகுதி பார்வையாளர்கள் வேலூர் ஜி.ரமேஷ், எம்.நூருல்லா, முத்தமிழ்ச் செல்வி, என்.கே.ஆர்.சூரிய குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்!’

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமை! சிவ.ஜெயராஜ் சிறப்புரை!

செஞ்சி, செப். 23-

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்ற தீர்மான ஏற்பு விளக்கப் பொதுக்கூட்டம் செஞ்சி -திருவண்ணாமலை சாலையில் உள்ள கலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமையுரைநிகழ்த்தினார். கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ்சிறப்புரையாற்றினார்

செயற்குழு உறுப்பினர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், மாவட்ட வகை தலைவர் டாக்டர் சேகர்,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனி ராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை,ஒன்றிய கழக செயலாளர் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜா ராமன்,தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜயராகவன், சாந்தி சுப்பிரமணியன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் கோபிநாத்,பிரசன்னா, திலகவதி, கே .எஸ் .அன்சாரி, திருமலை, கே. எஸ். செந்தில்குமார், பா. செந்தில் குமார், தமிழரசன், சிவகாமி , ரோமியன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, செல்வி ராமசரவணன்,அன்பு செழியன்,உள்ளிட்ட மாநில,மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள்,அணி நிர்வாகிகள், தொமுச நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கொட்டும் மழையில் தமிழ்நாட்டை தலைகுனியே விடமாட்டேன் என உறுதிமொழி ஏற்றனர்.செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

### ‘நந்தனம் கல்லூரியில் – கவிஞர் முத்துலிங்கம் தலைமையில்

# பெரியார் - அண்ணா - கலைஞர் பிறந்த நாள் கவியரங்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 23-

சென்னை நந்தனம் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கவியரங்கத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

பெரியார், அண்ணா, கலைஞர் பிறந்த நாள் கவியரங்கம் சென்னை நந்தனம் கல்லூரியில் நேற்று (22.9.2005 ) 11 மணியளவில் நடைபெற்றது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

மேனாள் அரசவைக் கவிஞர் முத்துலிங்கம் தலைமையில் திரைப் படப் பாடலாசிரியர்கள் ஆண்டாள் பிரியதர்சினி, சொற்கோ இரா. கருணாநிதி, இளையகம்பன், தமிழமுதன் ஆகியோரும் பேராசிரியர்களும் கவி பாடினார்.

கல்லூரி முதல்வர் முனைவர்.தங்கராஜ் விழாத் தலைமை தாங்கினார்.

# கொல்லம் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி அமைப்பாளர் ஷாலினி மறைவு!

## கே.ஆர்.முருகேசன் – கழகத்தினர் அஞ்சலி!

கொல்லம், செப். 23–

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதியில் வசிக்கும் கொல்லம் மாவட்டக் கழக மகளிர் அணி அமைப்பாளர் திருமதி ஷாலினி (வயது 43) நேற்று (22.9.2025) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



இன்று (23.9.2025) மதியம் 2 மணியளவில் அவரது உடல் புனலூர் அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் சென்று அங்குள்ள கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்படுகிறது.

முன்னதாக கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன், இளைஞர் அணி துரை பேச்சிமுத்து, அருள் ஜோதி, திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ், இடுக்கி மாவட்டக் கழக செயலாளர் ஜனார்த்தனன், கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜிராஜ் மற்றும் கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

இறந்த ஷாலினிக்கு தாயார் மற்றும் இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர்.

திருமதி ஷாலினி அவர்களின் மறைவிற்கு கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், கொல்லம் மாவட்டத்தில் மகளிர் அணி அமைப்பாளராக திறம்பட பணியாற்றி வந்தார், வர இருக்கும் கொல்லம் நகரசபை உறுப்பினர் தேர்தலுக்கு போட்டியிட தயாராக இருந்தார். இந்த நிலையில் அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தி னருக்கும் கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில்செஞ்சியில் நடைபெற்ற தமிழ்நாட்டைதலை குனிய விடமாட்டேன் தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமையில் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சிவ.ஜெயராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள்கொட்டும் மழையில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதிமொழிஏற்றனர்.

### நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானம் ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம்!

## இரா.ஆவுடையப்பன் தலைமையில் – தாயகம் கவி எம்.எல்.ஏ. சிறப்புரை!

நெல்லை.செப்.23.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானம் ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் வள்ளியூர் கலையரங்கில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாவட்ட பொருளாளர் ஜார்ஜ்கோஷல் மாவட்ட துணை செயலாளர்கள் தமயந்தி, மைக்கேல், இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,தெற்கு ஒன்றிய செயலாளர் எரிக் ஜூடு,பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் திசையன்விளை பேரூர் செயலாளர் ஜாண்கென்னடி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல் வரவேற்புரையாற்றினார்.மாவட்ட துணை செயலாளர் நம்பி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக துணை அமைப்பு செயலாளர்,திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி பங்கேற்று பேசியதாவது.

தமிழகத்தில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம்,கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு நிதி தர மறுப்பு,தொகுதி மறு சீரமைப்பு என ஒன்றிய அரசு மாநிலங்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் கொண்டு வரும் இந்த செயல்களை தமிழக முதல்வர் அவர்கள் எதிர்த்து வருகிறார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பாக ஆட்சி நடத்திக் கொண்டு வருகிறார், கல்வித்துறையில் இந்தியாவிற்கே வழிகாட்டு மாநிலமாக தமிழகம் சிறந்து விளங்குகிறது. ஒன்றிய அரசு சிறந்த கல்வி நிறுவனங்கள் என 17 கல்வி நிறுவனங்கள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டது. அதில் 11 கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளது என்பது சிறப்பாகும்.தமிழ்நாட்டின் கல்வித் தரத்தை முடக்கவே ஒன்றிய அரசு நீட்டை புகுத்தி உள்ளது. தமிழகத்தின் உரிமையை மீட்டெடுப்பதற்காகவும் இந்தி திணிப்பை எதிர்த்தும் நிதிப்பகிர்வில் பாரபட்சம் காட்டும் ஒன்றிய அரசுக்கு எதிராக அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்று முதல்வர் அவர்கள் ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தை தொடங்கியுள்ளார்.ஜூலை 1 ம் தேதி ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் தொடங்கப்பட்டது 62,000 வாக்குச் சாவகளிலும் தி.மு.க.வினர் வீடு ஊடாக சென்று குடும்பம், குடும்பமாக இந்த இயக்கத்தில் மக்களை சேர்த்துள்ளனர். இதுவரை 1 கோடி பேரை ‘ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தில் இணைத்துள்ளனர், இதற்கு அடுத்த கட்டமாக 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் தமிழகத்தை தலை குனிய விடமாட்டோம் மண், மானம் காப்போம் என உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சி முதலமைச்சர் அவர்கள் நடத்தி காட்டினார்கள். ஆண்டுதோறும் நாடாளுமன்றம் மையமண்டபத்தில் பொருளாதார ஆய்வு அறிக்கை தயார் செய்யப்படும்,அப்படி 2025 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வாசித்தபோது தமிழகத்திற்கு பாராட்டுக்கள் குவிந்தது,வளர்ந்து வரும் இந்தியாவில் பொருளாதாரத் தில் தமிழகம் 2 வது இடம்,காலை உணவு திட்டத்தால் மாணவர்களின் வருகை அதிகரிப்பு,கற்றல் திறன் மேம்பட்டு உள்ளது. மொத்தத்தில் கல்வி,சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்பது அந்த அறிக்கையிலேயே உள்ளது. அத்தகைய சிறப்பு வாய்ந்த ஆட்சியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி வருகிறார்கள். சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம்,கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு நிதி தர மறுப்பு, தொகுதி மறு சீரமைப்பு என ஒன்றிய அரசு மாநிலங்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் கொண்டு வரும் இந்த செயல்களை முதலமைச்சர் அவர்கள் எதிர்த்து வருகிறார்கள்.

இவ்வாறு ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. பேசினார்.

தொடர்ந்து நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் ‘ஓரணியில் தமிழ்நாடு’தீர்மானங்கள் அனைத்தும் கூட்டத்தில் வாசிக்கப் பட்டு தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்ற உறுதி மொழியும் அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

கூட்டத்தில் இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞானதிரவியம், சித்திக்,கே.கே.சி. பிரபாகரன், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன்,சாந்தி சுபாஷ், கனகராஜ்,ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர், முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், செல்வ கருணாநிதி, ராஜன், சுடலை கண்ணு போர்வல் கணேசன், சுபாஷ் சந்திர போஸ், நகர செயலாளர்கள் கணேசன், மணிசூரியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞரணி செல்வசூடாமணி, மாணவரணி அலெக்ஸ் அப்பாவு, இளைஞரணி ஜான்ரபீந்தர்,மகளிர் அணி மல்லிகா அருள், பேரூர் செயலாளர்கள் சுப்பையா, மனிஷா செல்வராஜ்,மணிகண்டன்,அயூப் கான், முருகையா பாண்டியன், கசமுத்து, தமிழ்வாணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம் நன்றியுரையாற்றினார்.




கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகம் சார்பில் வடகனந்தல் பேரூராட்சி புதிய பேருந்து நிலையம் கலைஞர் திடலில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் (21/09/2025) ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது, இதற்கு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் தலைமை தாங்கினார், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கையற்கன்னி, தொகுதி பொறுப்பாளர் வ.அன்பழகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆனந்த் என்ற இளஞ்செழியன், ஒன்றிய கழக செயலாளர்கள் கிருஷ்ணன், சின்னத்தம்பி, ஆறு.கதிரவன், அரவிந்தன், அன்புமணிமாறன் ஆகியோர் முன்னில வகித்தனர், பேரூர் கழக செயலாளர் சி.ஜெயவேல் வரவேற்றார், இதில் சிறப்பு அழைப்பாளராக திமுக மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார், இக்கூட்டத்தில் மாநில,மாவட்ட,ஒன்றிய, நகர,பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.